RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 60 | மார்ச்.8 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# "தமிழகம் மேலும் வளர்ச்சி காண இன்னும் 5 ஆண்டு திமுக ஆட்சி தொடர வேண்டும்" : முதல்வர் ஸ்டாலின்

சென்னை: மார்ச்.8-

'அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு மேலும் வளர்ச்சியடைய இன்னும் 5 ஆண்டுகாலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி தொடர வேண்டும்' என திருச்சி மாநாட்டையொட்டி திமுகவினருக்கு அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திருச்சி சிறுகனூர் மாநாட்டுக்கு வரவேற்று திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் எழுதியுள்ள மடலில், ' எல்லாச் சாலைகளும் ரோமாபுரி நோக்கிச் செல்கின்றன என்பது போல, எல்லாச் சாலைகளும் இப்போது மலைக்கோட்டை மாநகராம் திருச்சியை நோக்கியே பயணிக்கின்றன. திராவிட மாடல் 2.0 ஆட்சியை அமைத்திடும் உறுதியுடன் 2026 தேர்தல் களத்தில் பணியாற்றுவதற்கான பாசறையாக இந்த மாநாடு விளங்கிடும்.

70 ஆண்டுகளுக்கு முன், 'அன்பில் அழைக்கிறார்' என 1956ஆம் ஆண்டு திருச்சியில் நடந்த இரண்டாவது மாநில மாநாட்டிற்குக் கழகத் தம்பிகளுக்கு அழைப்பு விடுத்துக் கடிதம் எழுதினார் அண்ணா. 'தம்பி வா.. தலைமையேற்க வா' என மாநாட்டுத் தலைமைக்கு நெடுஞ்செழியனை முன்மொழிந்து அண்ணா ஆற்றிய உரையும், அந்த மாநாட்டுப் பந்தலில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான கழகத் தொண்டர்களிடம், தேர்தலில் திராவிட முன்னனேற்றக் கழகம் போட்டியிடலாமா வேண்டாமா என உட்கட்சி ஜனநாயகத்துடன் வாக்கெடுப்பு நடத்தி, பெருவாரியான கழகத் தொண்டர்கள், தேர்தலில் கழகம் போட்டியிட வேண்டும் என்று வாக்களித்ததன் அடிப்படையில், தீர்மானம் நிறைவேற்றி, 1957இல் முதல் முறையாகத் தேர்தல் களம் கண்டது நம் லட்சிய இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகம்.

காஞ்சியிலே அண்ணா வெற்றி பெற்றுச் சட்டமன்றம் சென்றார். எழும்பூரிலே அன்பழகனும், பெரம்பூரிலே சத்தியவாணிமுத்துவும் எனக் கழகத்தின் சார்பில் முதன்முறையாக 15 பேர் சட்டமன்றத்திற்கும், இரண்டு பேர் நாடாளுமன்றத்திற்கும் சென்றனர்.

ஒன்றிய அரசு இந்தியைத் திணித்தால் இன்று மட்டுமல்ல, அன்று முதலே அதற்கான எதிர்ப்புணர்வை உயிரைத் தியாகம் செய்து வெளிப்படுத்தி, தமிழைக் காப்பாற்றிய மண் திருச்சிதான். சிங்கத் தமிழன்



செந்தமிழ்த் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி தன் தேக்கு மரத் தேகத்திற்குத் தீ வைத்துக் கொண்டு உயிர்த்தியாகம் செய்த திருச்சி மண்ணில், தாய்த்தமிழ் உணர்வு அணையாத நெருப்பாகக் கனன்று கொண்டிருப்பதால்தான், இப்போது ரயில்வே கோட்டத்தின் நுழைவாயிலின் பெயரில் இந்தியைத் திணிக்கும் வேலையைச் செய்தபோது, திருச்சி மாவட்டக் கழகத்தினர் பொங்கி எழுந்து எதிர்ப்புணர்வைக் காட்டிய காரணத்தால், அங்கே இந்தி அகன்றது. தமிழ் நிலைத்து நின்றது.

2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக இதே திருச்சி சிறுகனூரில் நடந்த கழகத்தின் தேர்தல் சிறப்பு மாநாட்டில்தான் குடும்பத் தலைவியருக்கு மாதம் 1000 ரூபாய் உரிமைத் தொகை என்ற அறிவிப்பை உங்களில் ஒருவனான நான் வெளியிட்டேன். மக்கள் அளித்த ஆதரவால், 10 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு அமைந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் திராவிட மாடல் ஆட்சியில், 1 கோடியே 31 லட்சம் மகளிருக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கப்படும் திட்டம் சிறப்பாகச் செயல்படுகிறது.

அரசியல் எதிரிகளின் சதிகளால் அதற்கு இடையூறு வந்துவிடக்கூடாது என்று முன்கூட்டியே மூன்று மாத உரிமைத் தொகையையும், கோடைகால சிறப்புத் தொகையையும் வழங்கியதுடன் முதியோர் உதவித் தொகை பெறுவோர், கைம்பெண்கள், மாற்றுத்திறனாளிகள், அரசின் பராமரிப்பு உதவி பெறுவோர் என ஏறத்தாழ 40 லட்சம் பேருக்கும் சிறப்புத் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது.

கழகம் முதன்முதலில் போட்டியிட்ட 1957ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு, அதில் வழங்கப்பட்ட உறுதிமொழிகளின் அடிப்படையில் வாக்கு கேட்கும் வழக்கத்தைத் தொடங்கி வைத்தவர் அண்ணா. கருணாநிதியும் ஒவ்வொரு தேர்தலுக்கும் முன்பாக வெளியிட்ட தேர்தல் அறிக்கைகள் இந்திய அளவில் கவனத்தை ஈர்த்தவை.

உங்கள் பேரன்பையும் பெரும் உழைப்பையும் நம்பி 2021ஆம் சட்டமன்றத் தேர்தல் களத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை வழிநடத்தக் கூடியவனாகக் களம் கண்டேன். இப்போதும் அந்தக் கூட்டணியை வழிநடத்துபவனாக உங்களில் ஒருவனான நான் இருக்கிறேன்.

வருகின்ற மார்ச் 9ஆம் நாள் கழக உடன்பிறப்புகளின் திருமுகம் கண்டு நான் மகிழும் வாய்ப்பு அமையவிருக்கின்ற இதே திருச்சி சிறுகனூரில்தான் 5 ஆண்டுகளுக்கு முன் 2021 மார்ச் 7ஆம் நாள் உங்களின் திருமுகம் கண்டேன். அத்துடன், 7 அம்சத் திட்டங்களையும் வெளியிட்டேன். பத்து ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் பாழாய்ப் போன தமிழ்நாட்டின் பொருளாதாரம், வேளாண்மை, நீர்வளம், கல்வி மற்றும் சுகாதாரம், சமூகநீதி ஆகிய 7 அம்சங்களை மேம்படுத்துவதற்கான செயல்திட்டங்களைச்சிறுகனூரில் வெளியிட்டேன். அதில் முதல் இலக்காக நான் சொன்னது, அடுத்த பத்தாண்டுகளுக்குள் தமிழ்நாட்டில் இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சியை எட்டுவது" என்பதுதான்.

கழக உடன்பிறப்புகளின் உழைப்பாலும், தமிழ்நாட்டு மக்களின் ஆதரவாலும் உங்களில் ஒருவனான என் தலைமையில் அமைந்த திராவிட மாடல் அரசு 4 ஆண்டுகளிலேயே, இந்தியாவிலேயே 11.19% என்கிற இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சியைப் பெற்றே ஒரே மாநிலமாக, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு எந்தப் பங்களிப்பையும் செய்யாமல் வஞ்சிக்கின்ற ஒன்றிய அரசினாலேயே உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு மேலும் வளர்ச்சியடைய இன்னும் 5 ஆண்டுகாலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி தொடர வேண்டும். 2021 இல் சிறுகனூர் மாநாட்டில் அதைத்தான் வலியுறுத்தினேன். பத்தாண்டுகாலம் திமுக ஆட்சி தொடர்ந்து அமைந்திட வாய்ப்பளியுங்கள் என்று கேட்டேன்.

திராவிட மாடல் அரசின் 5 ஆண்டுகால ஆட்சியின் சாதனைகள், 'தமிழ்நாட்டைப் பாருங்கள்' என்று பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியிருக்கிறது.

அடுத்த 5 ஆண்டுகாலம் தொடரப்போகும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக்குவதுடன், சர்வதேசத் தரத்துடன் உலக நாடுகளுடன் போட்டி போடக்கூடிய அளவுக்கான வளர்ச்சியை நிச்சயம் பெற்றிருக்கும்.

2026இல் தொடரப்போகும் திராவிட மாடல் அரசின் தொலைநோக்குப் பார்வையிலான திட்டங்களை முன்வைத்து 'தமிழ்நாடு 2030' என்கிற 14 முக்கிய அம்சங்களை, மார்ச் 6ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற 'கனவு மெய்ப்படும்' நிகழ்வில் வெளிப்படுத்தினேன்' எனத் தெரிவித்துள்ளார்.





## கோவை கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் 3 பேருக்கு சாகும் வரை சிறை தண்டனை

கோவை: மார்ச்.8-

கோவையில் கல்லூரி மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் கைதான மூவருக்கும் சாகும் வரை சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

கோவை பீளமேடு விமான நிலையம் அருகே, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 2ம் தேதி இரவு, கோவையைச் சேர்ந்த கல்லூரி மாணவி, ஆண் நண்பருடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த 3 நபர்கள், ஆண் நண்பரை தாக்கிவிட்டு, கல்லூரி மாணவியை கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்தனர். இந்த வழக்கு தொடர்பாக கருப்பசாமி, அவருடைய தம்பி காளீஸ்வரன் மற்றும் தவசி ஆகிய 3 பேரை மறுநாள் போலீஸார் துப்பாக்கியால் சுட்டுப் ப்டித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை, கோவை அனைத்து மகளிர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு தொடர்பாக முதல் கட்டமாக 50 பக்கமும், 2வது கட்டமாக 220 பக்கமும் என மொத்தம் 270 பக்க குற்றப்பத்திரிகை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

நீதிபதி சுந்தர்ராஜ் முன்னிலையில் நடந்து வரும் இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட மாணவி, அவருடைய ஆண் நண்பர், உறவினர்கள், விசாரணை நடத்திய அதிகாரிகள் என 112 சாட்சிகள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டனர். 72 பேர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்தனர்.

சென்னையில் உள்ள தடயவியல் மற்றும் டி.என்.ஏ. பரிசோதனை அதிகாரிகள் காணொலி காட்சி மூலம் சாட்சியம் அளித்தனர். குற்றச் சம்பவம் நடந்து கடந்த 4 மாதங்களாக துரித விசாரணை நடைபெற்றது. குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் குற்றச்சாட்டு குறித்து நீதிபதி சுந்தர்ராஜ் கேள்வி கேட்டார்.

அரசு தரப்பு வழக்கறிஞர் பி.ஜிஷாவும் குற்றச்சாட்டுகள் குறித்து வாதிட்டார். இதைத் தொடர்ந்து எதிர்தரப்பு வழக்கறிஞர் ஒரு மணி நேரம் ஆஜராகி வாதாடினார். அவரது வாதத்துக்கு அரசு தரப்பு வழக்கறிஞர் பதில் வாதம் செய்தார்.

இதைத் தொடர்ந்து, இந்த வழக்கின் விசாரணை கடந்த மாதம் முடிந்தது. இதையடுத்து, இந்த வழக்கில் மார்ச் 7ம் தேதி தீர்ப்பு கூறப்படும் என்று நீதிபதி சுந்தர்ராஜன் அறிவித்தார்.

அதன்படி கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள மகளிர் நீதிமன்றத்துக்கு குற்றச்சாட்டுக்குள்ள என மூவரும் பலத்த போலீஸ் பாதுகாப்பு அளித்துவரப்பட்டு இன்று (மார்ச் 7) ஆஜர்படுத்தப்பட்டனர். இந்த மூவர் மீதான குற்றச்சாட்டுகளை உறுதிபடுத்திய நீதிபதி சுந்தரராஜன், மூவருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு அளித்தார்.

## மாதம் ரூ.2.500, திருமணத்துக்கு ஒரு பவுன்... மகளிருக்கான தவெக தலைவர் விஜய்யின் வாக்குறுதி பட்டியல்

சென்னை: மார்ச்.8-

தமிழகத்தில் தவெக ஆட்சி அமைந்தவுடன் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.2500 வழங்கப்படும், பெண்களின் திருமணத்துக்கு ஒரு பவுன் தங்கம், அனைத்துப் பேருந்துகளிலும் பெண்களுக்கு இலவசப் பயணம் உள்ளிட்டவை செயல்படுத்தப்படும் என தவெக தலைவர் விஜய் தேர்தல் வாக்குறுதிகளாக அறிவித்துள்ளார்.

சென்னையில் தவெக சார்பில் கொண்டாடப்பட்ட மகளிர் தின விழாவில் அக்கட்சியின் தலைவர் விஜய் வெளியிட்ட வாக்குறுதிகள் விவரம்:

* "பெண்கள், குழந்தைகள், முதியோர் நலனில் அக்கறை செலுத்துவதே தவெகவின் அடிப்படை முக்கிய நிலைப்பாடு. அதன்படி அதற்கென தனி இலாகா ஏற்படுத்தப்படும். அந்த இலாகா எனது நேரடி கட்டுப்பாட்டில் இருக்கும்.

* மாதம் ரூ.2,500: தமிழகத்தை இந்தியாவின் நம்பர் 1 மாநிலம் என தம்பட்டம் அடிக்கும் திமுக அரசு, மகளிர் உரிமைத் தொகையாக வெறும் ஆயிரம் ரூபாய் மட்டும் வழங்குகிறது. எனவே, தவெக அரசில் 60 வயது வரை உள்ள அனைத்து குடும்பத் தலைவிகளுக்கும் மாதம் ரூ.2,500 வழங்கப்படும். இதில் மாநில, ஒன்றிய அரசின் ஊழியர்களாக இருக்கும் குடும்பங்களுக்கு மட்டும் விதிவிலக்கு.



* 'அன்னபூரணி சூப்பர் சிக்ஸ்' திட்டத்தின் கீழ், ஒவ்வொரு குடும்பத்துக்கும் வருடத்துக்கு 6 கேஸ் சிலிண்டர்கள் கட்டணமின்றி வழங்கப்படும். இது தாய்மார்கள் வயிற்றில் பால் வார்க்கும் திட்டமாக இருக்கும்.

* அண்ணன் சீர் திட்டம் மூலம், பெண்களின் திருமணத்துக்கு ஒரு பவுன் தங்கம், தரமான பட்டு சேலையும் அளிக்கப்படும்.

* ரூ.15 ஆயிரம் உதவி: காமராஜர் கல்வி உறுதி திட்டத்தின் கீழ், 1 முதல் 12ஆம் வகுப்பு வரை இடைநிற்றலே இல்லாமல் குழந்தைகள் கல்வி கற்க, அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு ரூ.15 ஆயிரம் பொருளாதார உதவி வழங்கப்படும்.

* இப்போது பிங்க் நிற பேருந்துகளில் மட்டும் பெண்களுக்கு இலவச பயணத்திட்டம் உள்ளது. தவெக அரசு அமைந்தால் வெற்றிப் பயணம் திட்டத்தின் படி, அரசுப் போக்குவரத்து கழகத்தின் அனைத்துப் பேருந்துகளிலும் பெண்கள் இலவசமாக பயணிக்கலாம்.

* பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்ய ராணி வேலுநாச்சியார் படை அமைக்கப்படும். சாதாரண உடையில் 500 படைகள் மாநிலம் முழுவதும் கண்காணிப்பில் இருப்பார்கள்.

* பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளை விசாரித்து விரைவாக நீதி வழங்க அஞ்சலையம்மாள் விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.

* பொது போக்குவரத்து வாகனங்களில் பயணிக்கும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய எச்சரிக்கை பொத்தான்கள் அமைக்கப்படும்.

* சிசிடிவி கேமராக்கள் இல்லாத இடமே இல்லை என்ற வகையில் ஜீரோ டார்க் ஸ்பாட்டுகள் அமைக்கப்படும்.

* பொதுவிநியோக கடைகள், பள்ளிகள், கல்லூரிகள் விலையில்லா சானிடரி நாப்கின்கள் வழங்கப்படும்.

* சிங்கப்பெண்கள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் நிலுவையிலுள்ள கடன்களை திரும்ப செலுத்துவதன் மூலமும், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.5 லட்சம் வரை வட்டியில்லா கடன் வழங்கப்படும்.

## கோடநாடு வழக்கு விசாரணையை இன்னும் முடிக்காமல் இருப்பது ஏன்? சிபிசிஐடி போலீஸாருக்கு நீதிபதி கேள்வி

**ஊட்டி: மார்ச்.8–**

**கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு விசாரணையை இன்னும் முடிக்காமல் இருப்பது ஏன் என சிபிசிஐடி தரப்பிடம் நீதிபதி கேள்வி எழுப்பினார். மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மற்றும் அவரது தோழி சசிகலா ஆகியோருக்கு சொந்தமான தேயிலை எஸ்டேட் நீலகிரி மாவட்டம் கோடநாடு பகுதியில் உள்ளது.**

**இந்த எஸ்டேட்டில் கடந்த 2017ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் தேதி காவலாளியை கொலை செய்த ஒரு கும்பல் பங்களாவில் இருந்த சில ஆவணங்களை கொள்ளையடித்துச் சென்றது. இதுதொடர்பாக முக்கிய குற்றவாளி சயான் உட்பட 10 பேரை போலீஸார் கைது செய்தனர். இதுதொடர்பான வழக்கு ஊட்டி நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.**

**திமுக ஆட்சிக்கு வந்த பின்னர் மேற்கு மண்டல ஐஜி தலைமையில் 5 தனிப்படைகள் அமைத்து விசாரணை துரிதப்படுத்தப்பட்டது. அப்போது கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் தடயங்களை அழித்ததாக கனகராஜின் சகோதரர் தனபால், உறவினர் ரமேஷ் ஆகிய 2 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் தனிப்படை போலீசார் 316 பேரிடம் மறுவிசாரணை நடத்தினர்.**

**இதைத்தொடர்ந்து கோடநாடு வழக்கு சிபிசிஜடி விசாரணைக்கு மாற்றப்பட்டது. சிபிசிஜடி போலீஸார் பல்வேறு கட்டங்களாக வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சம்மன் அனுப்பி விசாரணை நடத்தி வருகின்றனர்.**

**இந்நிலையில், இந்த வழக்கு ஊட்டி ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. இவ்வழக்கில், அரசு தரப்பு வழக்கறிஞர் கனகராஜ், சிபிசிஜடி ஏடிஎஸ்பி முருகவேல் தலைமையிலான போலீஸாரும் குற்றம்சாட்டப்பட்டவர்களில் வாளையார் மனோஜும் ஆஜராகினர்.**

**இந்நிலையில், விசாரணையை இன்னும் முடிக்காமல் இருப்பது ஏன் என நீதிபதி முரளிதரன் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த அதிகாரிகள், இதுவரை 269 சாட்சிகளிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**வழக்கு தொடர்பாக செல்போன் உரையாடல் மற்றும் தகவல் பரிமாற்றம் குறித்து குஜராத்தில் உள்ள பிஎஸ்என்எல் ஆய்வகத்திடம் இருந்து அறிக்கை கேட்டிருப்பதாகவும் இன்னும் அந்த நிறுவனத்திடமிருந்து தகவல்கள் வராததால் தாமதமாகி வருகிறது என்றும் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து, வழக்கு விசாரணையை ஏப்.24க்கு தள்ளிவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.**



# செந்துறையில் ரூ. 35 லட்சத்தில் புதிய பேருந்து நிலையம் அமைச்சர் சா.சி சிவசங்கர் திறந்து வைத்தார்

பெரம்பலூர், மார்ச். 8-

செந்துறையில் 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், புதிதாக கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார். அரியலூர் மாவட்டம் செந்துறை அரசு போக்குவரத்து பணிமனை ஏக்கர் பரப்பளவில், நகராட்சி நிர்வாகம் சார்பில், 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன பேருந்து நிலைய பணி, 2025ம் ஆண்டு துவங்கி, தற்போது நிறைவு பெற்றது. விழாவிற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை முதன்மை செயலாளர் சுஞ்சோங்கம் ஜாதக் சிறு தலைமை தாங்கினார். அரியலூர் மாவட்ட ஆட்சியர் இரத்தினசாமி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஷ்வாஷ் பாலசுப்பிரமணியம் சாஸ்திரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலாண்மை இயக்குநர் தசரதன் அனைவரையும் வரவேற்றார். இந்த புதிய பேருந்து நிலையத்தை போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார். தொடர்ந்து அரியலூர், ஜெயங்கொண்டம் தி.மு.க., எம்.எல்.ஏ.கள் சின்னப்பா, கண்ணன், மேலாண்மை இயக்குநர் பிரபுசங்கர், மாவட்ட வருவாய் அலுவலர் மல்லிகா, பொது மேலாளர் சதிஷ்குமார், கோட்ட மேலாளர் ராம்குமார் ஆகியோர் பேசினர். இதில் திமுக நகர ஒன்றிய மாவட்ட மாநில நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். முடிவில் கார்த்திக்கேயன் நன்றி கூறினார்.

# மலையாள மாரியம்மன் கோவில் தீமிதி திருவிழா ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு



தஞ்சாவூர் மார்ச். 8-

திருவையாறு பதினைந்து மண்டபத் தெரு, ஓடத்துறைத் தெரு சக்தி விநாயகர், மலையாள மாரியம்மன், முனியாண்டவர் கோயில் 70ம் ஆண்டு தீமிதி திருவிழா நடைபெற்றது.

மலையாள மாரியம்மன் கோயில் 70 ம் ஆண்டு திருவிழா கடந்த மாதம் 15 ம் தேதி காப்பு கட்டுதலுடன் தொடங்கியது. இரவு முக்கிய திருவிழாவான தீமிதி திருவிழாவை முன்னிட்டு 100 க்கும் மேற்பட்ட பக்தர்கள் புஷ்ய மண்டப படித்துறையிலிருக்கு பால் குடம் எடுத்து இன்னிசை முழங்க ஊர்வலமாக வந்து கோயில் சன்னதியில் அமைத்திருந்த குண்டத்தீல் இறங்கி தீ மிதித்து தங்கள் நேர்த்திக் கடன் செலுத்தினர்.வரும் 8ம் தேதி பாக்குடம் எடுத்து வருதல், 9ம் தேதி இரவு கும்ப பூஜையும், வரும் 11ம் தேதி காலை மாரியம்மனுக்கு அபிஷேக ஆராதனைகளும், இரவு சுவாமி புறப்பாடும், காப்பு அவிழ்த்தலுடன் திருவிழா நிறை பெறுகிறது.



# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா 1000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கல்

மாதவரம், மார்ச்.8-

திருவள்ளுர் மாவட்டம் மாதவரம் தொகுதி சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆலோசனையின் பேரில் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் இளைஞரணி சார்பில் பம்மதுகுளம் கோணிமேடு ரவுண்டானா அருகே தமிழ்நாடு முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் 73 வது பிறந்தநாளை முன்னிட்டு வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய இளைஞரணி செங்குன்றம் எஸ்.வடிவேல் ஏற்பாட்டில் சுமார் 1000 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை பிரியாணி உணவு மற்றும் சேலை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் மோரை கோ.தயாளன் கலந்து கொண்டு கேக் வெட்டி சுமார் 1000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை பிரியாணி உணவு மற்றும் சேலை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர்கள் ராம்தாஸ், தேவிமாரி, மாவட்ட பிரதிநிதி அண்ணாதுரை, திமுக நிர்வாகிகள் ராமகிருஷ்ணன், பத்மநாபன், ஹரிகிருஷ்ணன், திருநாவுக்கரசு, மாவட்ட சிறுபான்மை நலப் பிரிவு அமைப்பாளர் அபுல்ஹஸன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் தேவராஜ், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் பிரபு, ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் கவியரசன், ஸ்டீபன் (எ) ஹரிகிருஷ்ணன், ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் சங்கர், ராஜேஷ் கண்ணா, கிளைச் செயலாளர்கள் காசி, ராமகிருஷ்ணன், அசோகன், கோவிந்தராஜ், ராஜேந்திரன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி, கிளைக் கழக நிர்வாகிகள், இளைஞரணி, மகளிரணி நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்டம் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசு தலைமை கொறடா 174 பயனாளிகளுக்குரூ.20.98 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



நீலகிரி மார்ச். 8-

தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் "உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தின் நிறைவாக "கனவுகள் மெய்ப்படும்" என்ற தலைப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலந்து கொண்டதை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம் பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, முன்னிலையில், தமிழ்நாடு ஊரக நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் 171 பயனாளிகளுக்கு ரூ.20.94 கோடி மதிப்பில் வங்கி கடன் இணைப்புகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.4.85 இலட்சம் மதிப்பில் தாலிக்கு தங்கம் மற்றும் நிதியுதவி என மொத்தம் 174 பயனாளிகளுக்கு ரூ.20.98 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், மகளிர் திட்டம் சார்பில் நடைபெற்ற சிறுதானியங்கள் மற்றும் பாரம்பரிய உணவு திருவிழா மற்றும் விற்பனை கண்காட்சியில் கலந்து கொண்ட உதகை, குன்னூர், கோத்தகிரி மற்றும் கூடலூர் ஆகிய வட்டாரங்களை சார்ந்த மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அரசு தலைமைக்கொறடா தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழகமெல்லாம் பரவும் வகையிலும், தமிழ்நாட்டு மக்கள் பயன்பெறும் வகையிலும், இந்தியாவே பார்த்து வியக்கும் வண்ணம் இதுபோன்றதொரு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதேபோன்று அரசின் திட்டங்களில் பயனடைந்துள்ள பயனாளிகளின் தரவுகள் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்தவும், திட்டங்களின் தற்போதைய செயல்பாட்டு நிலை குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும்மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளை கண்டறியவும், அவர்களது வசிப்பிடங்களுக்கே தன்னார்வலர்கள் மற்றும் அலுவலர்கள் நேரடியாக சென்று அறிந்து கொள்ளும் உங்க கனவு சொல்லுங்க என்ற திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். இந்த திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 1.92 கோடி மக்கள் இத்திட்டத்தின் கீழ் தங்களது கனவுகளை வெளிப்படுத்தி உள்ளார்கள்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் , சாதாரண கிராமப்புற பகுதிகள் மட்டுமின்றி நகராட்சி, மாநகராட்சி பகுதிகள் வரை என்னெனென்ன செய்ய வேண்டும் என எடுத்துரைத்துள்ளார்கள். இவை மட்டுமன்றி இந்த மாநிலத்தை பசுமைப்புரட்சி நிறைந்த மாநிலமாகவும், 24 சதவீதம் வனப்பகுதியாக இருந்ததை 33 சதவீதம் வனப்பகுதியாக மாற்றும் வகையில் பலகோடி ரூபாய் மதிப்பில் மரக்கன்றுகளை அதற்கென ஒரு தனித்துறையினை அமைத்து நடவு செய்யும் பணியினை மேற்கொண்டு வருகிறார்கள். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மக்கள் அனைவரும் அரசின் திட்டங்களை தெரிந்து பயன்பெற வேண்டும் என அரசு தலைமைக்கொறடா தெரிவித்தார்.

முன்னதாக, அரசு தலைமை கொறடா மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில், ஐந்தாண்டு சாதனை புத்தகம் 2030 (ழிமிலிநிமி ஸிமி கூஷிமிஷிமிளிழி 2030) புத்தகத்தினையும் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) ஜெயராமன், நகர்மன்ற தலைவர்கள் வாணீஸ்வரி (உதகை), பரிமளம் (கூடலூர்), திருமதி சுசீலா (குன்னூர்), உதகை நகர்மன்ற துணைத்தலைவர் ரவிக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஆர்.எஸ்.மங்கலத்தில் மத நல்லிணக்கத்தை போற்றும் வகையில் அனைத்து சமுதாய மக்கள் பங்கேற்ற இப்தார் (நோன்பு திறக்கும்) நிகழ்ச்சி நடைபெற்றது





ஆர்.எஸ்.மங்கலம். மார்ச். 08-

புனித ரமலான் மாதத்தில் இஸ்லாமியர்கள் நோன்பு கடைப்பிடித்து வரும் நிலையில், இராமநாதபுரம் மாவட்டம் மாவட்டம் ஆர்.எஸ். மங்கலம் பகுதியில் மத நல்லிணக்கத்தைப் போற்றும் வகையில் இப்தார் (நோன்பு திறக்கும்) நிகழ்ச்சி நடைபெற்றது. அதன்படி அப்பகுதியில் செயல்படும் எஸ் எம் ஏ குட்லு மஜீத் பள்ளி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இப்தார் நிகழ்ச்சி ஜாதி, மத எல்லைகளைக் கடந்து இந்து, கிறிஸ்துவ மற்றும் இஸ்லாமியப் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டு சமூக ஒற்றுமைக்குச் சான்றாகத் திகழ்ந்தனர். இந்த நிகழ்வில் சிறப்பம்சமாக,அனைத்து அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தக சங்க உறுப்பினர்கள் ஒரே இடத்தில் கூடி அன்பைப்பகிர்ந்து கொண்டனர்.



# திருச்சியில் மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சிறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது

திருச்சிராப்பள்ளி மார்ச். 08-

திருச்சிராப்பள்ளி உள்ள அண்ணா வளைவு, A.R.S திருமண மஹாலில் மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் சிறப்பு அழைப்பிதழ் நிகழ்ச்சி 06.03.2026 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்கள்:,இந்த விழாவில் தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். அவருடன் துவாக்குடி நகர மன்றத் தலைவர் ணி. காயாம்பு முன்னிலை வகித்தார். நிர்வாகிகள் பங்கேற்பு:நிகழ்ச்சியை முன்னின்று நடத்திய அமைப்பின் முக்கிய நிர்வாகிகள்: * D. ராஜேஷ் (நிறுவனத் தலைவர்) * A. ஆதிலட்சுமி ஆனந்தராஜ் (நிறுவன பொதுச் செயலாளர்) * V. ராமன் (மாநில ஆலோசகர்) இந்த விழாவில் சமூக பாதுகாப்பு மற்றும் மக்கள் நலன் சார்ந்த பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. பொதுமக்களும் அமைப்பின் உறுப்பினர்களும் திரளாகக் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

# நீலகிரி மாவட்டம் கூடலூர் தோட்ட தொழிலாளர் தொழிற்பயிற்சி மையத்தில் போதை பொருள் தடுப்பு மற்றும் தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி



நீலகிரி மார்ச். 8-

நீலகிரி மாவட்டம் கூடலூர் தோட்ட தொழிலாளர் தொழிற்பயிற்சி மையத்தில் இளையோர் செஞ்சிலுவை சங்கம் துவக்க விழாவும் போதைப்பொருள் தடுப்பு மற்றும் தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் மற்றும் நீலகிரி மாவட்ட இந்திய செஞ்சிலுவை சங்கம் ஆகியன சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு தொழில் பயிற்சி மைய முதல்வர் ஷாஜி ஜார்ஜ் தலைமை தாங்கினார்..

இளையோர் செஞ்சிலுவை சங்கத்தை துவக்கி வைத்து பேசிய செஞ்சிலுவை சங்க மாவட்டச் செயலாளர் மோரிஸ் சாந்த குரூஸ் பேசும்போது செஞ்சிலுவை சங்கமானது போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக உருவாகி இன்று உலக நாடுகள் முழுவதிலும் தனது பணியை சிறப்புடன் செய்து வருகிறது இந்தியாவில் ஜனாதிபதியை தலைவராக கொண்டும் மாநிலங்களில் ஆளுநர்களை தலைவராக கொண்டும் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் தலைமையிலும் செயல்பட்டுவரும் செஞ்சிலுவை சங்கம், தற்போது பள்ளிகளில் இளம் சிறார் செஞ்சிலுவை சங்கம் மற்றும் கல்லூரிகளை இளையோர் செஞ்சிலுவை சங்கம் என செயல்பட்டு வருகிறது

செஞ்சிலுவை சங்கங்கள் மூலம் பேரிடர் மேலாண்மை முதலுதவி பயிற்சி மற்றும் மனிதநேயத்தோடு பொதுமக்களுக்கு உதவுவது, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் உள்ளிட்ட முக்கிய பணிகளை செய்து வருகிறது.

இளைஞர்களை நல்வழியில் செல்ல செஞ்சிலுவை சங்கத்தில் சேர்த்து பயன்பெறலாம் என்றார்.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் பேசும்போது இளைஞர்களிடையே பெருகிவரும் போதை பழக்கங்கள் சமூகத்தில் பெரிய தாக்கங்களை உருவாக்குகிறது மனிதர்களின் நடத்தையில் திருட்டு, பொய், கொலை வரை குற்றங்கள் செய்யத் தூண்டுவதோடு மனித உடலில் அனைத்து உறுப்புகளும் பாதிக்கும் நோய்களையும் உருவாக்கி விடுகிறது. எனவே இளையோர்கள் சமூகப் பணிகளில் தங்களை அர்ப்பணித்து தீய வழிகளை தவிர்க்க வேண்டும் என்றார்.

செஞ்சிலுவை சங்க திட்ட அலுவலரும் கூடலூர் அரசு கலைக் கல்லூரி ஆங்கில பேராசிரியருமான செல்வகுமார் பேசும்போது எல்லா குற்றங்களுக்கும் அடிப்படையாக போதைபொருள் பயன்பாடு உள்ளது போதையை தவிர்த்து வாழ உடற்பயிற்சி விளையாட்டு போன்றவற்றை கையில் எடுத்து நல்வழியில் வாழ வேண்டும் என்றார்

தொடர்ந்து தொழிற்பயிற்சி மையத்தில் இளம் செஞ்சிலுவை சங்க கிளை துவக்கப்பட்டது நிகழ்ச்சியில் தொழிற்பயிற்சி மைய பயிற்றுநர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மாலை தந்தி

ஞாயிற்றுக்கிழமை 08.03.2026



## நரிக்குடி ஒன்றியத்தில் மார்ச் 10ல் மாபெரும் சாலைமறியல்தென் மாவட்ட விவசாயிகள் சங்கம் அறிவிப்பு

நரிக்குடி மார்ச். 08-

விருதுநகர் மாவட்டம் நரிக்குடி ஒன்றியத்தில் கடந்த ஆண்டுக்கான வறட்சி நிவாரணம் வழங்கக் கோரியும், நடப்பு ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முறையான கணக்கெடுப்பு நடத்த வலியுறுத்தியும் வரும் மார்ச் 10ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) நரிக்குடியில் மாபெரும் சாலைமறியல் போராட்டம் நடைபெறவுள்ளது. முக்கிய கோரிக்கைகள்:

தென் மாவட்ட விவசாயிகள் சங்கம் (நரிக்குடி ஒன்றியம்) சார்பில் விடுக்கப்பட்டுள்ள இந்த கோரிக்கையில் பின்வரும் அம்சங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன:

* கடந்த ஆண்டு நிவாரணம்: நரிக்குடி ஒன்றியத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியினால் வாழ்வாதாரத்தை இழந்த விவசாயிகளுக்கு, இதுவரை வழங்கப்படாத வறட்சி நிவாரணத் தொகையை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

* நடப்பு ஆண்டு கணக்கெடுப்பு: இந்த ஆண்டும் வறட்சியின் தாக்கம் கடுமையாக இருப்பதால், பாதிக்கப்பட்ட பயிர்கள் மற்றும் பகுதிகளை வேளாண் விரிவாக்க அலுவலகம் மூலம் உரிய முறையில் கணக்கெடுப்பு நடத்தி, உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.68 கிராம விவசாயிகள் பங்கேற்பு:

இந்தப் போராட்டம் குறித்து விவசாய சங்க நிர்வாகிகள் தெரிவிக்கையில், "நரிக்குடி, வீரசோழன் மற்றும் அ.முக்குளம் ஆகிய மூன்று பிர்காக்களில் உள்ள 68 வருவாய் கிராமங்களைச் சேர்ந்த சுமார் 6,165 விவசாயிகள் இந்த மறியல் போராட்டத்தில் நேரடியாகப் பங்கேற்கத் தயாராகி வருகின்றனர்" என்று தெரிவித்தனர்.

வேளாண் விரிவாக்க அலுவலக உதவி இயக்குநரிடம் ஏற்கனவே இது குறித்த கோரிக்கை மனு அளிக்கப்பட்ட நிலையில், உரிய நடவடிக்கை எடுக்கப்படாததால் இந்தச் சாலைமறியல் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ளது. இதனால் அன்றைய தினம் நரிக்குடி பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## காவேரிப்பட்டினத்தில் ஓபிஎஸ் அணி மற்றும் மாற்று கட்சியினர் 1000 பேர் அமைச்சர் சக்கரபாணி முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்

கிருஷ்ணகிரி,மார்ச். 08-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியம் ஓபிஎஸ் அணியின் ஒன்றிய செயலாளர் கேபிள் சின்னசாமி ஏற்பாட்டில், அமமுக ஒன்றிய கழக செயலாளர் சின்னராஜ், தமிழக கட்டுமான அமைப்புசாரா தொழிலாளர் நல வாரிய மாநில தலைவர் ஐயப்பன், நகர செயலாளர் மணி, கரடி அள்ளி தொகுதி செயலாளர் லோகா பிராமன் உள்ளிட்ட கால்வேஅள்ளி, கரடி அள்ளி, ஜெகதாப், சந்தாபுரம்,திம்மாபுரம், மலையண்டஅள்ளி, மிட்ட அள்ளி,எர்ர அள்ளி



உள்ளிட்ட ஊராட்சிகளை சேர்ந்த மாற்று கட்சியினர் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர்,பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்எல்ஏ தலைமையில் 1000க்கும் மேற்பட்ட மாற்று கட்சியினர்,மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அவர்கள் முன்னிலையில் தங்களை திமுகவை இனைத்துக் கொண்டனர். மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், ஒன்றிய செயலாளர்கள் தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சரவணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செங்குட்டுவன், நகர செயலாளர் ஜே கே எஸ் பாபு,மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் சீனிவாசன், அன்பரசு, காவேரிப்பட்டினம் பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில் குமார், மாவட்டத் துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, மாவட்ட பொருளாளர் கதிரவன், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் மணி விஜயன், முன்னாள் நகர செயலாளர் ஜே கே எஸ் சாஜித், மாவட்ட சுற்றுச்சூழல் அணி செயலாளர் பாரி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சங்கர், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தற்காப்பிற்காக துப்பாக்கிச்சூடு: மானாமதுரை அருகே சரித்திர பதிவேடு குற்றவாளி கைது

சிவகங்கை மார்ச். 08-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே தப்பி ஓட முயன்ற பிரபல ரவுடியை, காவல் ஆய்வாளர் தற்காப்பிற்காக காலில் சுட்டு பிடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சம்பவம் குறித்து விரிவான தகவல்:திருப்பாச்சேத்தி காவல் நிலையத்தில் நிலுவையில் உள்ள மூன்று பிணையில் வரமுடியாத வாரண்ட் (NBW) வழக்குகள் தொடர்பாக, மிக்கல்பட்டினத்தைச் சேர்ந்த சரித்திர பதிவேடு குற்றவாளி (A+ Category) ஊர்க்காவலனை போலீசார் தேடி வந்தனர். (07.03.2026), மானாமதுரை காவல் ஆய்வாளர் குமரவேல் பாண்டியன் தலைமையிலான தனிப்படையினர் கானூர் கிராம மயானம் அருகே ஊர்க்காவலனைப்



பிடிக்க முயன்றனர். அப்போது, ஊர்க்காவலன் தன்னிடம் இருந்த வாளால் ஆய்வாளர் குமரவேல் பாண்டியனைத் தாக்க முயன்றுள் ளார்.துப்பாக்கிச்சூடு:ஆய்வாளர் முதலில் வானத்தை நோக்கிச் சுட்டு எச்சரிக்கை விடுத்தார். இருப்பினும், ஊர்க்காவலன் மீண்டும் தாக்க முற்பட்டதால், தற்காப்பு நடவடிக்கையாக ஆய்வாளர் தனது துப்பாக்கியால் ஊர்க்காவலனின் வலது காலில் சுட்டார்.

இதில் காயமடைந்த ஊர்க்காவலன் உடனடியாக மீட்கப்பட்டு, திருப்புவனம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். யார் இந்த ஊர்க்காவலன்?கைது செய்யப்பட்ட ஊர்க்காவலன் (31) மீது பல்வேறு காவல் நிலையங்களில் பாரதூரமான வழக்குகள் நிலுவையில் உள்ளன: * கொலை வழக்குகள்: 3 * கொலை முயற்சி வழக்குகள்: 2 * கஞ்சா கடத்தல், அடிதடி மற்றும் சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருத்தல் என மொத்தம் 33 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.



## சிவகங்கை வடக்கு ஒன்றியப்பகுதிகளில் வெல்லும் தமிழ்ப் பெண்கள்

### பவானி கணேசன். அழகு மீனாள் . புதூர் செல்வம். ஒக்கூர் சோமசுந்தரம் பங்கேற்பு

சிவகங்கை மார்ச். 08-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வடக்கு ஒன்றியம் ஒக்கூர். புதூர். குளக்கட்டப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் எனும் கழகத்தலைமையின் முன்னெடுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது...

சிவகங்கை வடக்கு ஒன்றியக்கழக செயலாளர் திருமலை முத்துராமலிங்கம் அறிவுறுத்தலின் பேரில் மாவட்ட திமுக மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன் முன்னிலையில் பாக் முகவர் அழகு மீனாள் செல்வம் தலைமையில் ஸ்டாலின் பெண்கள் படையினர் வீடு வீடாகச் சென்று கழக ஆட்சியின் சாதனைகளை விளக்கி கையேடுகளை வழங்கினர்...

இந்த நிகழ்ச்சியின் போது ஒன்றிய துணைச் செயலாளர் ஒ.புதூர் செல்வம். மாவட்ட பிரதிநிதி ஒக்கூர் சோமசுந்தரம். பாக் முகவர் சாந்தி உள்ளிட்ட ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்...



## சாய் மகிழ் அகாடமியின் புதிய லோகோவை வெளியிட்டார் புதுச்சேரி முதல்வர்

புதுச்சேரி மார்ச். 08-

புதுச்சேரியின் கல்வி மற்றும் கலைச் சேவையில் தடம் பதித்து வரும் சாய் மகிழ் அகாடமியின் (Sai Magizh Academy) புதிய இலச்சினை (Logo) வெளியீட்டு விழா கடந்த (05.03.2026) அன்று மாலை சிறப்பாக நடைபெற்றது.லோகோ வெளியீடு:புதுச்சேரி முதல்வர் இல்லத்தில் நடைபெற்ற இந்த விழாவில், மாண்புமிகு முதல்வர் ழி. ரங்கசாமி கலந்துகொண்டு, அகாடமியின் புதிய லோகோவை அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தி வைத்தார். பின்னர் அகாடமியின் எதிர்கால முயற்சிகளுக்குத் தனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் அவர் தெரிவித்தார்.முக்கியப் பங்கேற்பாளர்கள்:சாய் மகிழ் அகாடமியின் தலைவர் வி. சுருதி புவனேஷ் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவிற்கான ஏற்பாடுகளைச் செயலாளர் புவனேஸ் பூசைத்துரை முன்னின்று சிறப்பாகச் செய்திருந்தார்.சிறப்பு விருந்தினர்கள்:

இந்தநிகழ்வில் அகாடமியின் பயிற்சியாளர்கள் சாய் அங்கயற்கன்னி, நித்யா மற்றும்அகாடமி மாணவர்கள் திரளாகப் பங்கேற்றனர். லோகோ திறப்புவிழாவின்போது மாணவர்கள்மற்றும் பயிற்சியாளர்கள் இணைந்து முதல்வர் முன்னிலையில் இலச்சினையைச் சிறப்பித்தனர். கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் அகாடமி எடுத்து வரும் இத்தகைய முயற்சிகள் அனைவராலும் பாராட்டப்பட்டது.

## 2026 சிவகங்கை சட்டமன்றத் தொகுதி: உத்தேச வேட்பாளர் பட்டியல் வெளியீடு

### திமுக உத்தேச பட்டியல் வேட்பாளர்கள்



■ துரை ஆனந்த்



■ சேங்கை மாறன்



■ முத்துராமலிங்கம்



■ பொற்கோ



■ ஆரோக்கியசாமி

### அதிமுக உத்தேச வேட்பாளர்கள்



■ இளங்கோவன்



■ செந்தில்நாதன்



■ கருணாகரன்



■ சேவியர் தாஸ்

### காங்கிரஸ் உத்தேச பட்டியல் வேட்பாளர்கள்



■ சுந்தர்ராஜன்



■ சஞ்சய்

சிவகங்கை, மார்ச்.8-

2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, சிவகங்கை தொகுதியில் களம் காண வாய்ப்புள்ள உத்தேச வேட்பாளர்களின் பட்டியலை சிவகங்கை டைம்ஸ் வெளியிட்டுள்ளது. பல்வேறு அரசியல் கட்சிகளின் சார்பில் முன்னிறுத்தப்படும் முக்கியப் பெயர்கள் பின்வருமாறு: திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக)திமுக சார்பில் ஐந்து பேர் உத்தேச வேட்பாளர்களாகக் கருதப்படுகின்றனர்:

த. சேங்கைமாறன் (மாவட்டத் துணைச் செயலாளர் - திருப்புவனம் பேரூராட்சித் தலைவர்) சி.எம். துரை ஆனந்த் (சிவகங்கை நகரச் செயலாளர் - சிவகங்கை நகர்மன்றத் தலைவர்) ஆ. முத்துராமலிங்கம் (சிவகங்கை வடக்கு ஒன்றியச் செயலாளர்)வே. ஆரோக்கியசாமி (காளையார்கோவில் கிழக்கு ஒன்றியச் செயலாளர்)கே.எம். பொற்கோ (மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அதிமுக)

அதிமுக தரப்பில் நான்கு முக்கியப் பெயர்கள் இடம்பெற்றுள்ளன:P.R. செந்தில்நாதன் (மாவட்டச் செயலாளர் - சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர்)சேவியர் தாஸ் (கல்லல் தெற்கு ஒன்றியச் செயலாளர்)V.G.B. கருணாகரன் (மாநில எம்.ஜி.ஆர் இளைஞரணி துணைச் செயலாளர் - சிவகங்கை வடக்கு ஒன்றியச் செயலாளர்) இராமு. இளங்கோவன் (மாவட்ட அம்மா பேரவைச் செயலாளர்)பாரதிய ஜனதா கட்சி (பாஜக)

பாஜக சார்பில் இரண்டு வேட்பாளர்கள் உத்தேச பட்டியலில் உள்ளனர்:மேப்பல் சக்தி (எ) சத்தியநாதன் (மாநில செயற்குழு உறுப்பினர் - முன்னாள் மாவட்டத் தலைவர்)இ. கந்தசாமி (மாவட்டத் துணைத் தலைவர்)இந்திய தேசிய காங்கிரஸ்காங்கிரஸ் கட்சி சார்பில்:பச்சேரி C.R. சுந்தரராஜன் (தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளர்)ஏ.சி. சஞ்சய் (மாவட்டத் தலைவர்)நாம் தமிழர் கட்சி (NTK)நாம் தமிழர் கட்சியின் சார்பில் மாநில மகளிர் பாசறை ஒருங்கிணைப்பாளர் இந்துஜா ரமேஷ் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளார்.அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் (அம மு க) அ மமுக சார்பில்:ரி. அன்பரசன் (மாநில வழக்கறிஞர் பிரிவு துணைச் செயலாளர்) தனம் அபினயா (மாநில மாணவியர் அணிச் செயலாளர்) தமிழக வெற்றிக் கழகம் (தவெக)புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள தமிழக வெற்றிக் கழகம் சார்பில்:முத்துபாரதி (தெற்கு மாவட்டச் செயலாளர்)பரமேஸ்வரன் (ஒன்றியச் செயலாளர்) இந்த பட்டியல் தற்போதைய நிலவரப்படி கணிக்கப்பட்ட உத்தேச வேட்பாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தேர்தல் நெருங்கும் வேளையில் அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் வெளியாகலாம்.



## தாராபுரத்தில் இனமான பேராசிரியர் அன்பழகன் 6ஆம் ஆண்டு நினைவு நாள் அமைச்சர் கயல்விழி செல்வராஜ் மலர் தூவி மரியாதை

தாராபுரம், மார்ச். 8-

இனமான பேராசிரியர் பெருந்தகை அன்பழகன் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தாராபுரம் நகர கழகம் சார்பில் அவரது திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அவர்கள் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் தாராபுரம் நகர கழக செயலாளர் முருகானந்தம், தாராபுரம் நகர மன்ற தலைவர் பாப்பு கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்து பேராசிரியர் அன்பழகன் அவர்களின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதில் நகர கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள், நகர மன்ற உறுப்பினர்கள், நகர ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிவசங்கர், மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவர் அருக்காணி உள்ளிட்ட கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு பேராசிரியர் அன்பழகன் அவர்களின் நினைவை போற்றினர்.

# செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் தாம்பரத்தில் நடைபெற்ற இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது

தாம்பரம், மார்ச். 08-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் தாம்பரத்தில் நடைபெற்ற இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் இஸ்லாமியர்களுக்கு என்றும் உறுதுணையாக இருப்பது கழகமே என்று ரம்ஜான் பரிசு செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் பேசினார்.

செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் தாம்பரத்தில் இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் இஸ்லாமியர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் தலைமையில் தாம்பரம் டாக்டர் அம்பேத்கார் திருமண மண்டபத்தில் வழங்கப்பட்டது.

பெருந்திரளாக இஸ்லாமிய பெண்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில் மத குருமார்கள் துவா செய்த பின்பு நோன்பு திறக்கப்பட்டது. மேலும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவருக்கும் ரம்ஜான் பரிசாக புத்தாடை மற்றும் மளிகை பொருட்கள் அடங்கிய பத்து வகையான பொருட்களை செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் வழங்கினார்.

நிகழ்ச்சியில் அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம்.சின்னையா கலந்துகொண்டார். தாம்பரம் மத்திய பகுதி கழகச் செயலாளர் எல்லார் செழியன் வரவேற்புரையாற்றினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் தாம்பரம் கிழக்கு பகுதி கழகச் செயலாளர் எம்.கூத்தன், தாம்பரம் மேற்கு பகுதி கழகச் செயலாளர் முன்னாள் நகரமன்ற துணை தலைவர் ஏ.கோபிநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் மார்க்கெட் ஜி.பாபு, மாவட்ட சிறுபான்மையினர் நலப்பிரிவு தலைவர் முன்னாள் கவுன்சிலர் எம்.கே.நாகூர் கனி, மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி இணைச் செயலாளர் எஸ்.மாரி, மாவட்ட சிறுபான்மையினர் நலப் பிரிவு இணைச் செயலாளர் டி.சம்சுதீன், வட்டக் கழகச் செயலாளர் வாழை எம்.பெரியசாமி, மத்திய பகுதி மாணவர் அணி செயலாளர் எஸ்.தமீம் அன்சாரி, மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற துணைச் செயலாளர் அக்பர் அலி, மத்திய பகுதி மகளிர் அணி செயலாளர் தாரா பேகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் இஸ்லாமிய பெருமக்களுக்கு ரம்ஜான் பரிசுகள் வழங்கி பேசுகையில்,

இன்றைய தினம் தாம்பரத்தில் இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி சிறப்புடன் நடைபெறுகின்றது. இந்நிகழ்ச்சி குறித்து கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியாரிடம் தெரிவித்தோம். இஸ்லாமிய பெருமக்கள் அனைவருக்கும் "என்னுடைய நல்வாழ்த்துக்களை தெரிவித்திடுங்கள். நிகழ்ச்சியினை சிறப்புடன் நடத்துங்கள்" என்று எங்களிடம் தெரிவித்தார். அதன்படி இன்றைய தினம் இந்நிகழ்ச்சி சிறப்புடன் நடைபெறுகின்றது. மேலும் இஸ்லாமிய பெருமக்களுக்கு செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் ரம்ஜான் பரிசாக புத்தாடை, பாசுமதி அரிசி, எண்ணெய் உட்பட பத்து வகையான பொருட்களும் பரிசாக வழங்கப்படுகிறது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இஸ்லாமியர்களுக்கு என்றும் உறுதுணையாக இருப்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே. வாக்குகளை மட்டுமே பெற்றுக்கொண்டு பின்பு இஸ்லாமியர்களை மறந்துவிடுகின்ற இயக்கம் அல்ல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். இஸ்லாமிய மக்கள் மீது தனி அன்பு கொண்ட இயக்கம் கழகம் ஆகும்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால்,

நாகூரில் வருடந்தோறும் நடைபெறும் சந்தனக்கூடு நிகழ்ச்சியில் அரசு சார்பில் சந்தன கட்டைகள் வழங்கப்படும் என்று அறிவித்து ஆயிரக்கணக்கான சந்தன கட்டைகளை நாகூர் தர்காவிற்கு வழங்கியவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

அதே போல் உலமாக்கள் ஓய்வு பெற்ற பின்பு அவர்களுக்கு வருமானம் இல்லாத சூழ்நிலையை அறிந்து உலமாக்களுக்கு ஓய்வு ஊதியம் கிடைக்க வழிவகை செய்தவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.







இஸ்லாமியர்கள் கடுமையாக விரதம் இருக்கும் காலகட்டத்தில் நோன்பு கஞ்சி தயாரிக்க அவர்களது குடும்ப சூழல் இடம் தராது என்பதனை அறிந்து அவர்கள் நோன்பு கஞ்சி தயாரிக்க அரசு சார்பில் அரிசி வழங்க புரட்சித்தலைவி அம்மா உத்தரவிட்டார்கள்.

மேலும் மெக்கா மற்றும் மதீனாவிற்கு செல்பவர்களுக்கு மானியம் வழங்கிய பெருமையும் புரட்சித்தலைவி அம்மா சாரும்.

2013 ஆம் ஆண்டு செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் செம்பாக்கம் வள்ளல் யூசப் நகரில் கழக அம்மா பேரவை துணைச் செயலாளராக இருக்கும் ஜி.எம். சாந்தகுமார் நகரமன்றத் தலைவராக இருந்தார். அப்போது அரசுக்கு சொந்தமான 50 சென்ட் இடத்தில் இஸ்லாமியர்கள் காமெண்ட் வால் அமைத்து, இப்தார் நோன்பு மற்றும் மசூதி நிகழ்ச்சிகள் நடப்பதற்கு இஸ்லாமியர்கள் அனுமதி கோரினார்கள். அவர்களது கோரிக்கையை ஏற்று அதற்காக தீர்மானம் நிறைவேற்றி அனுமதியும் வழங்கப்பட்டது. தற்போது அங்கு நோன்பு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மேலும் அதே பகுதியில் அதே 2020ஆம் ஆண்டு கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் ஆட்சிக்காலத்தில் வஃப்பு போர்டுக்கு சொந்தமான 6 கிரவுண்ட இடத்தில் கபர்ஸ்தான் அமைத்திட அனுமதி கோரப்பட்டது. அதற்கான அனுமதியும் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் ஆட்சிக்காலத்தில்தான் வழங்கப்பட்டது. அதே போல் தாம்பரத்தில் பொதுநலத்திற்காக போராடிய பொதுமக்கள் மீது தடியடி நடத்தப்பட்டது. குறிப்பாக இஸ்லாமிய பெண்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த சம்பவத்திற்கு அதிமுக சார்பிலும் கண்டனம் தெரிவிக்கப்பட்டு அவர்களுக்கு உறுதுணையாக இருந்தது கழகமே.

இப்படி அனைத்து வகையிலும் இஸ்லாமியர்களுக்கு உறுதுணையாக இருப்பது அதிமுகதான்.

எனவே யார் உங்களுக்கு உறுதுணையாக இருக்கின்றார்கள் என்பதனை நீங்கள் அறிவீர்கள். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் தலைமையில் கழக அரசு அமைந்திட உங்களது பேராதரவினை அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் பேசினார்.

நிகழ்ச்சியில் கழக அணி நிர்வாகிகள் ஜி.எம்.சாந்தகுமார், டாக்டர் பாலாஜி ஸ்ரீகாந்த், என்.அசார், பகுதி கழகச் செயலாளர்கள் இரா.மோகன், ஜெ.சீனுபாபு, காஞ்சிபுரம் மண்டல அண்ணா தொழிற்சங்கச் செயலாளர் ஆர்.வேணுகோபால், மாமன்ற உறுப்பினர்கள் ஸ்டார் பிரபா, சி.சாய்கணேஷ், எம்.ஜெ.எல்.வாணி சுரேஷ்பாபு, மாவட்ட மாணவர் அணி செயலாளர் கார்த்திக்கேயன் மனோகர், பகுதி கழக துணை செயலாளர் டி.ஆர்.கெஜா, ப.வெங்கட்ராமன், எம்.பாலகணேஷ், கே.தனலட்சுமி, நிர்மலாமாரி, மாவட்ட அணி நிர்வாகிகள் எம்.வேலு, இ.வி.சம்பத், டீ.டி.தில்லைராஜ், எ.வி.சம்பத்குமார், ஆர்.அமுதா, சி.சுபாஷினி, தாம்பரம் கே.ரகு, இ.எம்.டேனியல், ஏ.விஜயமுகுந்தன், சிறுபான்மையினர் நலப்பிரிவு பகுதி செயலாளர் எஸ்.எம்.அனிபா, தாம்பரம் கிழக்கு பகுதி நிர்வாகிகள் கோ.மனோகர், இ.சுசிலா, என்.சாரதா, எஸ்.லோகநாயகி, பீ.ஜார்ஜ், ஆர்.சதீஷ்குமார், எம்.கஜேந்திரமுத்து, எஸ்.திலகவதி, மேற்கு பகுதி நிர்வாகிகள், எஸ்.எஸ்.எஸ்.சிவா, பீ.மோகன்ராஜ், இ.வெங்கடேசன், எம்.கார்த்திக், விமல்பிரியா தன்ஸ், தேவி ஸ்ரீதரன், வட்டக் கழகச் செயலாளர்கள் டி.பார்த்தசாரதி, எஸ்.ஜேசுராஜ், பல்லவன் பி.நாரயாயணசாமி, எஸ்.வெற்றிச்செல்வன், மெடிக்கல் மா.வெங்கடேசன், ஆர்.சிவக்குமார், எம்.குமணன், வி.பாலாஜி, பி.ராஜா, ஏ.அப்துல்மஜித், எஸ்.கோட்டைசாமி, ஏ.கே.வி.ஜீவன்ஜீவா, எஸ்.பொன்னுசாமி, எம்.வசந்த், சி.கந்தன், வி.கோபால், கே.கிருஷ்ணமூர்த்தி, கே.கே.சரவணன், டி.பாலாஜி, டாக்டா வை.சுரேஷ்குமார், எம்.செந்தில்குமார், கேபி.ராஜமாணிக்கம், எம்.ஆர்.எல். ஜெயரத்தினம், ஆஜெகஜீவன்ராம், எம்.மோகன், கடப்பேரி. ஜெ.மாரி, பகுதி பிற அணி நிர்வாகிகள் ஜெ.ஜெயக்குமார், என்.ஆர்.சுப்பிரமணியம், தேங்காய்கடை எஸ்.மூர்த்தி, எஸ்.திருமூர்த்தி, பி.பாலாஜி, ஏ.பழனி, எஸ்.தயாளன், பா.சுபாஷ், வி.தினேஷ், எம்.வீரமணி, எஸ்.ராபின், வி.செந்தில்குமார், ஜி.லோகேஷ்வரன், கீ.சாய்கார்த்திக், எஸ்.நாகு, கோயில் ஆர்.செந்தில்குமார், பி.அந்தோணி, த.ஐயப்பன், எல்.எஸ்.செல்வம், ஆர்.வி.யுவராஜ், ஆர்.மிர்த்துன்ஜெயின், எம்.மல்லிகா, ஜி.ராம்குமார், ஆ.ஒம்பிரகாஷ், கே.குணசேகரன், சுரேஷ்கன்னியப்பன், கே.ஸ்ரீதரன், எல்.ஆகாஷ் உட்பட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் உட்பட திரளான கழகத்தினர் கலந்துகொண்டனர்.

## ஜெ.ஜெயலலிதா பிறந்த நாள் விழாபொதுமக்களுக்கு அறுசுவை பிரியாணி உணவு வழங்கல்





மாதவரம், மார்ச். 8-

திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி மொண்டியம்மன் நகர் பஜாரில் மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதாவின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், சோழவரம் கிழக்கு ஒன்றியம், மாவட்ட அம்மா பேரவை சார்பில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அம்மா பேரவை துணைத்தலைவர் மாணிக்கம் ஏற்பாட்டில் சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை பிரியாணி உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. சோழவரம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.கார்மேகம் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் முன்னாள் பால்வளத்துறை அமைச்சருமான மாதவரம் வி.மூர்த்தி கலந்து கொண்டு மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதல்வர் ஜெ.ஜெயலலிதாவின் திருஉருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் சுமார் 500க்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு அறுசுவை பிரியாணி உணவினை வழங்கினார். மாவட்ட விவசாய பிரிவு இணை செயலாளர் காசி, மாவட்ட வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளர் வழக்கறிஞர் ரமேஷ், சோழவரம் ஒன்றிய அம்மா பேரவை இணை செயலாளர் உலகநாதன், வடிவேல் நகர் கிளை செயலாளர் சுரேஷ்குமார் ஆகியோர் நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தனர்.

இதில் தலைமை பொது குழு உறுப்பினர் மனோகரன், மாவட்ட ஓட்டுனர் அமைப்புசாரா தொழிலாளர் நல அணி செயலாளர் செல்வம், செங்குன்றம் நகர கழக செயலாளர் ரமேஷ்,மாவட்ட இலக்கிய அணி தலைவர் இளங்கோவன், மாவட்ட மாணவரணி இணை செயலாளர் ஹரி, மாவட்ட தொழிற்சங்க இணை செயலாளர் வேலாயுதம், மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை இணை செயலாளர் பத்மநாபன், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் ஜெகன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி இணை செயலாளர் சுமோ ரவி, உள்ளிட்ட அதிமுக மாவட்ட ,ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் மகளிர் அணியினர், இளைஞர் இளம்பெண்கள் பாசறை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி பிரிவு செயலாளர் பாலன் அனைவருக்கும் நன்றி கூறினார்.




## புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு முடிச்சூரில் அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

முடிச்சூர் மார்ச். 08-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த முடிச்சூரில் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிப்ரவரி 24ஆம் தேதி பிறந்த நாளை முன்னிட்டு முடிச்சூர் அடுத்த லட்சுமி நகர் பகுதியில் அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பரங்கிமலை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம் பி மனோகரன் தலைமையில் பரங்கிமலை மேற்கு ஒன்றிய இளைஞரணி பொருளாளரும் ஒன்பதாவது வார்டு கிளைக் கழக செயலாளர் கே.முருகானந்தன் மற்றும் பரங்கிமலை மேற்கு ஒன்றிய இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை இணைச் செயலாளர் கே ராதா ஆகியோர் ஏற்பாட்டில் மிக சிறப்பாக நடைபெற்றது .இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.இராஜேந்திரன் கலந்துகொண்டு அம்மா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு சில்வர் பாத்திரம் மற்றும் அறுசுவை உணவு வழங்கினார்கள்

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் ஊராட்சி மன்ற துணை தலைவர் என்.சசிகலா கல்கி, டிவிஆர் வெங்கட்ராமன், தாமரை செல்வம், ராஜேந்திரன், கஜேந்திரன், குமார், பாலசுப்பிரமணியன், சந்தோஷ்குமார் பாலமுருகன், சரளா, யோகேஸ்வரன், பானு ரேகா, பாக்கியலட்சுமி, ரேணுகா, கோவிந்தன், கமலேஷ், தருண், சஞ்சய் மற்றும் முடிச்சூர் ஊராட்சி கழக நிர்வாகிகள் வார்டு கழக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



## வெட்டுடையார் காளியம்மன் கோவில் தோரண வாயில் மற்றும் மூத்த தம்பதியர்க்கு சிறப்பு செய்தல்

காளையார் கோவில் மார்ச். 08-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வட்டம் கொல்லங்குடி அரியாக்குறிச்சி அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் கோவில் வளாகத்தில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள தோரண வாயில் குடமுழுக்கு விழா இனிதே நடைபெற்றது...கோவில் அறங்காவலர் தலைவர்.கண்டிப்பட்டி வி.சி.கண்ணப்பன் தலைமையிலும் . கோவில் செயல் அலுவலர் மாரிமுத்து மற்றும் கோவில் அறங்காவலர்களான கண.சந்திரன் வேளார் மற்றும் இராணி சீனிவாசன் உள்ளிட்ட கோவில் பூசாரிகள் முன்னிலையிலும் சிறப்பாக நடைபெற்றது...இதனிடையே மூத்த ஐம்பது தம்பதியருக்கு இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சிறப்பு செய்யும் நிகழ்ச்சியானது சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் தொடங்கி வைத்ததையடுத்து கோவிலில் சிறப்பு பூஜை வழிபாடுகள் நடத்தி மூத்த தம்பதியருக்கு சிறப்பு செய்யப்பட்டது...இந்த நிகழ்ச்சியில் நாட்டரசன் கோட்டை திமுக பேரூர்க்கழக செயலாளர் ஜெயராமன். காளையார்கோவில் வடக்கு ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் கொல்லங்குடி சதீஷ்குமார் மற்றும் கோல் பணியாளர்கள் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, மாற்றுத்திறனாளிகளுக்கு திறன்பேசிகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் செயற்கை கால்கள் ஆகியவற்றை மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி வழங்கினார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் பிரகாஷ் (ஓசூர்),மதியழகன் (பர்கூர்), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, மாற்றுத்திறனாளி நல அலுவலர் முருகேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161